Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.45/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைசெல்வி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | இளவரசன் | தொழில் | உதவி இயக்குநர் |
| கிராமம் | காஞ்சிபுரம் | மதம் | இந்து |
| மாவட்டம் | காஞ்சிபுரம் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 06th day of November 2023
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முன் விசாரணை ( எதிரி அருள் ஆஜரில் உள்ளார் )**

நான் மருந்து கட்டுபாட்டு பிரிவில் உதவி இயக்குநராக பணி செய்து வருகிறேன். நான் திருப்பத்துர் சரக மருந்து ஆய்வாளராக கடந்த 05.05.2015 அன்று பொருப்பில் இருந்தபோது, இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நல பணி அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படி எண் 12, பஜனை கோயில் தெரு, ஜோலார்பேட்டையில் வசித்து வரும் அருள் என்பவர் போதிய கல்வி தகுதி இல்லாமல் மருத்தும் பார்த்து வருவதை குறித்து ஆய்வு செய்யுமாறு அறிவுரியத்தின் பேரில் என்னை இணை இயக்குநர் திருமதி.மணிமேகலை என்பவர் ஆய்விற்காக என்னை அழைத்தார். நானும், ஆய்வாளர் திரு.சாந்தலிங்கம் மற்றும் மருத்துவ அலுவலர் கலிவரதன், திருமதி.மணிமேகலை ஆகியோர்கள் ஆய்விற்காக மேற்கண்ட முகவரிக்கு சென்றோம். அங்கு ஆய்வு செய்தபோது அருள் என்பவர் அவர் வீட்டின் அருகே 2 படுக்கை கொண்ட கிளினிக் மற்றும் ஆங்கில மருந்துகளை வைத்து மருத்துவம் பார்த்து வந்தது தெரியவந்தது. அவர் கல்வி தகுதியை பற்றி விசாரித்தபோது போதிய கல்வி தகுதி இல்லாமல் மருத்துவம் செய்து வந்ததால் அங்கிருந்த மருந்துகளை கைப்பற்றி அதன் லேபல்களை சரிபார்த்து அவை ஆங்கில மருந்துகள் என்று சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் அளித்த சான்றிதழ் ஆகும். **அந்த சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவல் ஆய்வாளர் திரு.சாந்தலிங்கம் அவர்கள் அ.சா.1 திருமதி.மணிமேகலை

கொடுத்த புகாரின் பேரில் எதிரி அருளை கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். கைப்பற்றபட்ட மருந்துகளையும் நாங்கள் போலிசாரிடம் ஒப்படைத்தோம். என்னிடம் காட்டபடும் அ.சா.பொ.1 மருந்துகள் தான் எதிரியிடமிருந்து நாங்கள் கைப்பற்றியதாகும். வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் 05.05.2015 அன்று இரவு 8.30 மணியளவில் ஆய்விற்கு சென்றோம். நானும், அ.சா.1 மற்றும் திரு.கலிவரதன் மருத்துவ அலுவலர், காவல் ஆய்வாளர் திரு.சாந்தலிங்கம் மேலும் 2 தனிநபர் சாட்சிகள் தினேஷ் மற்றும் குமரேசன் ஆகியோர்கள் சென்றோம். நாங்கள் 10.30 மணி வரை ஆய்வு மேற்கொண்டோம், 11.00 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 1 முதல் 29 வரையுள்ள மருந்துகள் குறித்து நான் தான் அறிக்கை தாயர் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.2 சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதற்கு கீழ் 06.05.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் 05.05.2015 ம் தேதியன்று ஆய்வு மேற்கொண்டிருந்தால் அன்றே மேற்கண்ட சான்றிதழை தயார் செய்திருப்போம் என்றும், வழக்கிற்காக மேற்கண்ட சான்றிதழை பொய்யாக தயார் செய்ததால் தான் அதில் 06.05.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி குறித்து நேரடியாக எங்கள் அலுவலகத்திற்கு எந்த புகாரும் வரவில்லை என்றால் வரவில்லை. எதிரி நடத்தி வந்ததாக சொல்லபடும் கிளினிக் வெளியே தான் ஆங்கில மருத்துவம் பார்ப்பதாக பலகை ஏதேனும் வைத்திருந்தரா என்றால் எனக்கு நினைவில்லை. நாங்கள் சென்றபோது மருத்துவம் பார்க்க பொதுமக்கள் யாரேனும் வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தார்கள். அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்க காவல் துறைக்கு பரிந்துரைந்தோமா என்றால் இல்லை. நான் மருந்துகளை குறித்து சான்றிதழ் வழங்க மட்டும் தான் சென்றிருந்தேன். எதிரி பயன்பட்டிற்கு வைத்திருந்த இருக்கை மற்றும் குலுகோஸ் ஸ்டேன்டு ஆகியவற்றை காவல் துறையிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லபடும் மருந்துகள் அனைத்தும் பயன்படுத்தபடாத மருந்துகள் என்றும், எதிரி ஆங்கிய மருந்துகளை பயன்படுத்தியற்கு பயன் படுத்திய ஊசி மற்றும் குலுகோஸ் போன்ற பொருட்களை கைப்பற்றியுள்ளோமா என்றால் இல்லை. எதிரி ஆம்பூரில் உள்ள மணோன்மணி என்ற மருந்து கடையின் பொருப்பாளர் என்றால் எனக்கு தெரியாது. அந்த கடைக்கு கொண்டு செல்வதற்காக மருந்துகளை எதிரி பெற்று தனது வீட்டில் வைத்துக்கொண்டு மறுநாள் கடைக்கு கொண்டு செல்வார் என்றும், அதை நாங்கள் எதிரிபயன்படுத்தியதாக தவறுதலாக கைப்பற்றியுள்ளோம் என்றால்

சரியல்ல, பொருட்கள் அனைத்தும் தனித்தனியாக பயன்பாட்டிற்காக அடிக்கி வைக்கப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின் படி ஆய்வு மேற்கொண்டதால் நான் அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்பதால் எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தன் கடைக்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த மருந்துகளை கைப்பற்றி எதிரியின் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த மருந்துகள் பட்டியலை வழக்கிற்காக தயார் செய்ததால் தான் அதில் தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Signature of Witness.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.45/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிமேகலை | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சீனிவாசன் | தொழில் | இணை இயக்குநர் (ஓய்வு) |
| கிராமம் | மதுரை | மதம் | இந்து |
| மாவட்டம் | மதுரை | வயது | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 06th day of November 2023
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை ( எதிரி அருள் ஆஜரில் உள்ளார் )**

நான் மருத்துவம் மற்றும் ஊரக நல பணி இணை இயக்குநராக பணி செய்து ஒய்வு பெற்றுவிட்டேன். நான் வேலூர் மாவட்டத்தில் கடந்த 05.05.2015 அன்று இணை இயக்குநராக பணியிலிருந்தபோது மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரை மற்றும் மக்களின் புகாரின் பேரில் எண் 12, பஜனை கோயில் தெரு, ஜோலார்பேட்டையில் வசித்து வரும் அருள் என்பவரை ஆய்வு செய்தபோது அவர் தான் ஒரு ஆங்கில் மருத்துவர் என்று கூறி மக்களை ஏமாற்றியதும், ஊசி, குலுகோஸ் உள்ளிட்ட ஆங்கில மருத்துவத்தை இரு படுக்கை வசதி கொண்ட கிளினிக் வைத்து நடத்தி வருவதும், மேலும் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வந்தது எனது ஆய்வில் தெரியவந்தது. அவரது கிளினிக்கில் மருந்துகள் மற்றும் ஊசிகள் கைப்பற்றப்பட்டது. என்னுடன் ஆய்வின் போது உடனிருந்த மருந்துகள் ஆய்வாளர் திருமதி.கலைசெல்வி மருந்துகளை கைப்பற்றி காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். மேலும் என்னுடன் வந்த காவல் ஆய்வளார் திரு.சந்தலிங்கம் எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். எனவே திரு.அருள் மீது மக்களை ஏமாற்றுதல், மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துதல், தகுதியின்றி ஆங்கில மருந்துகள் கொடுத்தும், ஊரி போடுவது தொடர்பாக வழக்கு பதிவு செய்யுமாறு அதே நாள் 21.00 மணியளவில் நான் ஜோலார்பேட்டை காவல் நிலைய ஆய்வளார் அவர்களுக்கு புகார் அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் காவல்

நிலையத்தில் கொடுத்தாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டபடும் மருந்துகள் தான் எதிரியிடமிருந்து நாங்கள் கைப்பற்றியதாகும். **வழக்கு சொத்தான 1 முதல் 29 வரையுள்ள மருந்துகளின் பட்டியல் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின் படி தான் ஆய்வு மேற்கொண்டோம் என்றும், எங்கள் அலுவலகத்திற்கு எதிரியின் மீது தனிப்பட்ட முறையில் எந்த புகாரும் வர வில்லை என்றால் சரிதான். நாங்கள் 05.05.2015 அன்று இரவு 9.00 மணிக்கு எதிரியின் கிளினிக்கில் ஆய்வு மேற்கொண்டோம். சுமார் ஒரு மணி நேரம் நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம். அன்று இரவே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன். புகாரின் இறுதியில் என் கையொப்பத்திற்கு கீழ் 06 என்று எழுதப்பட்டு அதை 05 என்று திருத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மறுநாள் வரை நாங்கள் காவல் நிலையத்தில் இருந்ததால் அது 6 என்று குறிப்பிடப்பட்டிருக்கலாம். நானும், காவல் ஆய்வாளரும், மருந்துகள் ஆய்வாளரும் ஆய்விற்கு சென்றோம், வேறு யாரேனும் வந்தார்களா என்று தற்போது எனக்கு நினைவில்லை. எதிரி வைத்திருந்ததாக சொல்லபடும் கிளினிக் முன் மருத்துவம் பார்க்கப்படும் என்று பலகை ஏதேனும் வைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நாங்கள் ஆய்விற்கு சென்றபோது மக்கள் யரேனும் மருத்துவம் பார்க்க வந்திருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்களிடம் நான் வாக்குமூலம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. அவர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்க காவல் துறைக்கு பரிந்துரைந்தேனா என்றால் நினைவில்லை. படுக்கைகள் மற்றும் குலுகோஸ் ஸ்டேன்டு ஆகியவை எதிரி நடத்தியதாக சொல்லபடும் கிளினிக்கில் இருந்ததா என்றால் இருந்தது. அதை நான் காவல் துறையிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லபடும் மருந்துகள் அனைத்தும் பயன்படுத்தபடாத மருந்துகள் என்றும், எதிரி ஆங்கிய மருந்துகளை பயன்படுத்தியற்கு பயன் படுத்திய ஊசி மற்றும் குலுகோஸ் போன்ற பொருட்களை கைப்பற்றியுள்ளோமா என்றால் இல்லை. எதிரி ஆம்பூரில் உள்ள மனோன்மணி என்ற மருந்து கடையின் பொருப்பாளர் என்றால் எனக்கு தெரியாது. அந்த கடைக்கு கொண்டு செல்வதற்காக மருந்துகளை எதிரி பெற்று தனது வீட்டில் வைத்துக்கொண்டு மறுநாள் கடைக்கு கொண்டு செல்வார் என்றும், அதை நாங்கள் எதிரிபயன்படுத்தியதாக தவறுதலாக கைப்பற்றியுள்ளோம் என்றால் சரியல்ல, பொருட்கள் அனைத்தும் தனித்தனியாக பயன்பாட்டிற்காக

அடிக்கி வைக்கப்பட்டிருந்தது. மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின் படி ஆய்வு மேற்கொண்டதால் நான் அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்பதால் எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி நான் ஆங்கில மருத்துவர் என்று எந்த பலகையும் வைக்கவில்லை என்றால் ஆங்கில மருத்துவர் மட்டும் தான் பலகை வைப்பார். எதிரி தன் கடைக்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த மருந்துகளை கைப்பற்றி எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றும், அதன் அடிப்படையில் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of Witness.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.45/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலிவரதன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | இருசன் | தொழில் | இணை இயக்குநர் (ஓய்வு) |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 06th day of November 2023
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை ( எதிரி அருள் ஆஜரில் உள்ளார் )**

நான் இணை இயக்குநராக வேலூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் பணி செய்து ஒய்வு பெற்றுள்ளேன். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக கடந்த 05.05.2015 அன்று பொருப்பில் இருந்தபோது, ஜோலார்பேட்டை பகுதியில் ஆஜரில் உள்ள எதிரி அருள் என்பவர் மருத்துவம் பயிலாமல் கிளினிக் ஒன்றை நீண்ட நாட்களாக நடத்தி வருவதாக கேள்விப்பட்டு அ.சா.1 அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. பின்பு இது குறித்து ஆய்வு மேற்கொள்ள நானும், அ.சா.1 ம், அ.சா.2 ம் எதிரியின் கிளினிக்கிற்கு சென்றோம். அங்கு அ.சா.1 ஆய்வு மேற்கொண்டார் அதில் எதிரி தகுந்த கல்வி தகுதி இல்லாமல் ஆங்கில மருத்துவம் பார்த்த வந்தது தெரிந்துக்கொண்டோம். பின்பு இது குறித்து ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் போலிசாரும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். பின்பு எதிரி பயன்பாட்டிற்கு வைத்திருந்த மருந்துகளை மருந்துகள் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றி அறிக்கை தயார் செய்தார். பின்பு எதிரியையும், கைப்பற்றபட்ட பொருட்களையும் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றோம். பின்பு இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் அ.சா.1 இணை இயக்குநர் கேட்டுக்கொண்டதின் பேரில் ஆய்வு மேற்கொண்டோம். எதிரியின் மீது தனிப்பட்ட முறையில் எனக்கு புகார்

ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. எதிரி நடத்தி வந்ததாக சொல்லபடும் கிளினிக் வெளியே பலகை ஏதேனும் வைப்பபட்டிருந்தா என்றால் இல்லை. நாங்கள் சென்றபோது மருத்துவம் பார்க்க பொதுமக்கள் யாரேனும் வந்திருந்தார்களா என்றால் வந்திருந்தார்கள். அவர்களை அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்க காவல் துறைக்கு பரிந்துரைந்தோமா என்றால் நான் செய்யவில்லை. எதிரி பயன்பட்டிற்கு வைத்திருந்த இருக்கை மற்றும் குலுகோஸ் ஸ்டேன்டு ஆகியவற்றை காவல் துறையிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லபடும் மருந்துகள் அனைத்தும் பயன்படுத்தபடாத மருந்துகள் என்றும், எதிரி ஆங்கிய மருந்துகளை பயன்படுத்தியற்கு பயன் படுத்திய ஊசி மற்றும் குலுகோஸ் போன்ற பொருட்களை கைப்பற்றியுள்ளோமா என்றால் மருந்தக ஆய்வாளர் அவர்கள் தான் கைப்பற்றினார். எதிரி ஆம்பூரில் உள்ள மணோன்மணி என்ற மருந்து கடையின் பொருப்பாளர் என்றால் எனக்கு தெரியாது. அந்த கடைக்கு கொண்டு செல்வதற்காக மருந்துகளை எதிரி பெற்று தனது வீட்டில் வைத்துக்கொண்டு மறுநாள் கடைக்கு கொண்டு செல்வார் என்றும், அதை நாங்கள் எதிரிபயன்படுத்தியதாக தவறுதலாக கைப்பற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின் படி ஆய்வு மேற்கொண்டதால் நாங்கள் அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்பதால் எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி தன் கடைக்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த மருந்துகளை கைப்பற்றி எதிரியின் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of Witness.